முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 02.03.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 86/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜீலாதேவி | மாவட்டம் | : | காஞ்சிபுரம் |
| த/பெ | : | கருணாகரன் | வயது | : | 45 |
| ஊர் | : | மாங்காடு (பூந்தமல்லி) | தொழில் | : | இல்லத்தரசி |

**பி.வா.சா. 1 (ஜீலாதேவி): பிரதிவாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் **பிரதிவாதி தரப்பு முதல் சாட்சி (பி.வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

**கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 29.11.2023 தேதியிட்ட சர்வே எண். 152/5ஏ- 28 சென்ட் நிலத்திற்கு வேலாயுதம் பெயரில் உள்ள அ பதிவேடு சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 31.01.2019 தேதியிட்ட வேலாயுதம் அவர்கள் செய்யார் வட்ட கூட்டுறவு நிலவள வங்கியில் சர்வே எண் 152/5ஏ-28 சென்ட் நிலத்தை 1985ல் அடமானம் வைத்து பிறகு பைசல் செய்ததற்கான ரசீதின் அசல் **பி.வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 20.11.2003 தேதியிட்ட வேலாயுதம் இறப்பு சான்றிதழ் கணினி நகல் **பி.வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 29.09.2021 தேதியிட்ட வேலாயுதம் வாரிசு சான்றிதழ் கணினி நகல் **பி.வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 18.03.2021 தேதியிட்ட வேலாயுதம் குமாரத்தி பிரேமா பெயரில் சர்வே எண். 152/5ஏ1-12 சென்ட் நிலம் உள்ள பட்டா எண். 267 **பி.வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 18.03.2021 தேதியிட்ட பிரேமா பெயரில் உள்ள அ பதிவேட்டின் இணைய வழி கணினி நகல் **பி.வா.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 29.11.2023 தேதியிட்ட பிரேமா பெயரில் உள்ள சிட்டா, அடங்கல் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 29.11.2023 தேதியிட்ட சர்வே எண் 152/5ஏ1 மற்றும் 152/5ஏ2ன் புல வரைபடம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ. 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 01.03.2024 தேதியிட்ட ஜீலாதேவி அவர்கள் சர்வே எண். 152/5ஏ1-13 சென்ட் நிலத்தை பிரேமாவிடமிருந்து கிரயம் பெற்ற அசல் ஆவணம் **பி.வா.சா.ஆ. 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 31.01.2026 ஜீலாதேவி பெயரில் உள்ள பட்டா எண். 1728 **பி.வா.சா.ஆ. 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.03.02 16:42:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு